## தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை – 2016

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனக் மாற்றக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க அரச கமத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 23 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை வழங்குவது எனது பொறுப்பாகும்.

### 1.4 அபிப்பிராய மறுப்பிற்கான அடிப்படை

இவ்றிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் பெறுபேறாக நிதி நிலைமைக்கூற்றிலும் விரிவான வருமானக் கூற்றிலும் உரிமை மூலதன மாற்றக் கூற்றிலும் காசுப் பாய்ச்சல் கூற்றிலும் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்களுக்கும் மூலாதாரங்களுக்குரிய எந்தவொரு சீராக்கல்களுக்குமான அவசியம் இருந்ததா என்பதை என்னால் தீர்மானிக்க முடியாதுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராய மறுப்பு

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்கு போதுமான மற்றும் உசிதமான கணக்காய்வுச் சான்றை என்னால் பெற முடியாதிருந்தது. அதன் காரணமாக, இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

#### (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01

(i) நியமத்தின் 15 ஆம் பந்தியின் பிரகாரம், நிறுவனத்தின் நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன நிதிக்கூற்றுக்களினூடாக நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், நிதி நிலைமைக்கூற்றினது 4 ஆம் குறிப்பின் கீழ் சுட்டிக்காட்டப்பட்ட சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்கள் என்பவற்றிற்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 87,826,716 க்கான சீராக்கலும் ரூபா 146,667 க்கான தேய்மான நிதியேற்பாட்டிற்கும் தேவையான வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்படவில்லை.

(ii) சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்கள் மற்றும் உயிரியல் விஞ்ஞானச் சொத்துக்கள் மற்றும் 32 கமப் பண்ணைகள் ஆகியவற்றிற்கெனத் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் நியமத்தின் 38 ஆம் பந்தியின் பிரகாரம் முன்னைய ஆண்டினது ஒப்பீட்டுப் பெறுமதி சமர்ப்பிக்கப்படவில்லை.

(iii) நியமத்தின் 79(ஆ) பந்தியின் பிரகாரம், உரிமை மூலதன மாற்றக் கூற்றில் உள்ளடங்கிய மூலதன ஒதுக்கமாகிய ரூபா 130,696,928, வருமான ஒதுக்கமாகிய ரூபா 44,529,422, சோளப் பயிரிச்செய்கை செயற்திட்டத்திற்கான சுழற்சி நிதிய மீதியாகிய ரூபா 37,500,000 என்பவற்றைப் பேணுவதற்கான நோக்கமும் அவற்றின் தன்மையும் வெளிப்படுத்தப்படவில்லை.

(iv) வருமானக் கூற்றில் பணிகளுக்கேற்பச் செலவினம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அச் செலவினத்தில் உள்ளடங்கிய 4 செயற்திட்டங்களதும் 32 கமப் பண்ணைகளதும் செலவினமானது நியமத்தின் 104 ஆம் பந்தியின் பிரகாரம் அவற்றின் தன்மை தொடர்பான மேலதிகத் தகவல் குறிப்பின் மூலம் சமர்ப்பிக்கப்படாது செயற்திட்டத்தினது பெயரில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(v) நடைபெறும் வேலை மற்றும் வாடகைக் கொள்வனவுகளுக்குரிய கணக்கீட்டுக் கொள்கை நியமத்தின் 117 ஆம் பந்தியின் பிரகாரம் வெளிப்படுத்தப்படவில்லை.

#### (ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 08

(i) உயிரியல் விஞ்ஞானச் சொத்துக்களைப் பெறுமதியிடுகையில் சபையானது 2015 ஆம் ஆண்டின்போது உள்ளூர் கால் நடைகளுக்கு 25 சதவீத தேறக்கூடிய இலாப நிதியேற்பாட்டை மேற்கொண்டிருந்ததுடன், இந்நிதியேற்பாடானது மீளாய்வாண்டின்போது 10 சதவீதம் வரை குறைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நியமத்தின் 19(ஆ) பந்தியின் பிரகாரம் கணக்கீட்டுக் கொள்கையை மீளாய்வு செய்வதன் மூலம் ஏற்படும் தாக்கத்திற்கு நிதிக்கூற்றுக்களில் முன்னைய ஆண்டுகளுக்கான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் 42 ஆம் பந்தியின் பிரகாரம் குறிப்பிடத்தக்க முன்னைய காலப்பகுதிக்குரிய தவறுகள் பின்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து வழங்கப்படும் முதலாவது நிதிக் கூற்றுக்களில் தவறுகள் ஏற்பட்ட காலப்பகுதி தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஒப்பீட்டுப் பெறுமதிகளை மீண்டும் வெளியிடுவதன் மூலம் முன்னைய காலப்பகுதிக்கு ஏற்புடையதாக திருத்தஞ் செய்யப்பட்டிருக்கவில்லை.

**(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 10**

---

2014 ஆம் ஆண்டில் இணைந்த கம்பனியாகிய வரையறுக்கப்பட்ட இலங்கை கோழிப் பண்ணை நிர்வாக அபிவிருத்தி தனியார் கம்பனியினது நிர்வாக ரீதியான உரித்தைச் சபை சுவீகரித்திருந்தது. நியமத்தின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் இதன் பொருட்டு 2014 தொடக்கம் மீளாய்வாண்டு வரையான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படவில்லை.

**(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 12**

---

நியமத்தின் 27 ஆம் பந்தியின் பிரகாரம், இலாபமீட்டாத சபையின் குத்தகைகள் தொடர்பாக முன்கூட்டியே தீர்மானித்திருக்காததுடன் பிற்போட்ட வரியைக் கணக்கிலிடவும் இல்லை.

**(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் 13**

---

சபையின் நிதிக்கூற்றுக்களில் உயிரியல் விஞ்ஞான ரீதியான சொத்துக்களின் கீழ் வணிகமயப் பயிர்ச் செய்கையாகக் காட்டப்பட்ட இறப்பரினது ரூபா 20,409,767, மர முந்திரிகையினது ரூபா 1,356,806 மற்றும் ஏனைய பயிரிச்செய்கைகளின் ரூபா 1,370,774 என்பவற்றைப் பெறுமதியிட்ட அடிப்படை நியமத்தின் 91 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

**(ஊ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

---

(i) நியமத்தின் 7 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றை இனங்காண்பதாயின் அதன் கிரயம் விசுவாசமாகப் பெறுமதியிடப்பட்ட வேண்டும். எவ்வாறாயினும், நிதிக்கூற்றுக்களில் சுட்டிக்காட்டப்பட்டதும் சபையின் பாவனையில் உள்ளதுமான ரூபா 225,189,438 பெறுமதி வாய்ந்த 10,241.84 ஹெக்டெயர் காணி எவ்வடிப்படையில் பெறுமதியிடப்பட்டது என்பதை இனங்காண முடியவில்லை.

(ii) நியமத்தின் 36 ஆம் பந்தியின் பிரகாரம், ஏதாவதொரு சொத்தொன்று மீளப் பெறுமதியிடப்படும்போது அச்சொத்துக்குரிய சகல வகைப் பண்டங்களும் மீளப் பெறுமதியிடப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2014 ஆம் ஆண்டில் வாகனங்களை மீளப் பெறுமதியிடுகையில் ரூபா 60,960,579 கிரயமுடைய 226 வாகனங்களைச் சபை மீளப்பெறுமதியிட்டிருக்கவில்லை.

(iii) நியமத்தின் 51 ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறை அல்லாத சொத்துக்களின் பயன்தரு காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால், ரூபா 179 மில்லியன் கிரயமுடைய 11,657 வகையான நிலையான சொத்துக்கள் முற்றாகத் தேய்மானத்திற்குள்ளாகியிருந்தும் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டவாறிருந்தன. அதன் பிரகாரமான மதிப்பிடப்பட்ட வழுவை இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் பிரகாரம் மீளாய்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) மீளாய்வாண்டின் இறுதியிலான பொருட் கணிப்புச் சபை அறிக்கையின் பிரகாரம் 14 கமப் பண்ணைகளில் விற்பனை செய்வதற்கெனத் தீர்மானிக்கப்பட்டிருந்த 1205 பொருட்களும் அகற்றப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த 1399 பொருட்களும் சம்பந்தமாக நியமத்தின் 73(உ)(ii) ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றில் வெளிப்படுத்தப்படவில்லை.

(v) தற்காலிமாகச் செயற்படாதிருக்கும் சொத்துக்கள், பொறித் தொகுதி, உபகரணங்கள் என்பவற்றினது தொடரும் பெறுமதி, முற்றாகத் தேய்மானத்திற்கு உள்ளாகியபோதும் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டவாறிருக்கும் சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்களது தொடரும் பெறுமதி, செயற்படுத்தப்படாது அப்புறப்படுத்தப்பட்டுள்ள, வகைப்படுத்தாது விற்பனைக்கென உள்ள சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்களது தொடரும் பெறுமதி தொடர்பான தகவல்கள் நியமத்தின் 79 ஆம் பந்தியின் பிரகாரம் வெளிப்படுத்தப்படவில்லை.

**(எ) இலங்கை கணக்கீட்டு நியமம் 17**

(i) நியமத்தின் 25 ஆம் பந்தியின் பிரகாரம், வாடகைக் கொள்வனவுக் கடன் கொடுத்தோர் கணக்கிலிடப்படுகையில் எதிர்காலக் காசுப்பாய்ச்சலது தற்போதைய பெறுமதி அல்லது நியாயமான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டுமாயினும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் 31(ஆ) பந்தியின் பிரகாரம், அறிக்கை வழங்கப்படும் காலப்பகுதியின் இறுதியில் அதி குறைந்த எதிர்கால வாடகைக் கொள்வனவினது கூட்டுத் தொகை மற்றும் அவற்றினது தற்போதைய பெறுமதிக்கும் இடையேயான கணக்கிணக்கம் மற்றும் அதற்குப் புறம்பாக நிறுவனத்தின் அறிக்கை வழங்கப்படும் காலப்பகுதியின் இறுதியில் எதிர்கால வாடகைக் கொடுப்பனவுத் தொகையினது கூட்டுத் தொகையுடன் அவற்றினது தற்போதைய பெறுமதியையும் ஓராண்டுக்குக் குறைவானவை, 1 முதல் 5 ஆண்டுகள் வரையிலானவை, 5 ஆண்டுகளுக்கு மேற்பட்டவை எனப் பொருத்தமானவாறு வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**(ஏ) இலங்கை கணக்கீட்டு நியமம் 19**

நியமத்தின் 57 ஆம் பந்தியின் பிரகாரம், ஊழியர்களது நலன்களைப் பெறுமதியிடுகையில், அது எதிர்காலக் கணிப்புடனான கூறு ஒன்றிற்கான செலவு அடிப்படையில் அமைய வேண்டுமாயினும், சபையானது சூத்திர அடிப்படையில் ஊழியர்களது பிற்கால நலன்களைக் கணித்திருந்தது.

**(ஐ) இலங்கை கணக்கீட்டு நியமம் 20**

மீளாய்வாண்டிலும் முன்னைய 5 ஆண்டுகளிலும் மூலதனச் சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்காகத் திறைசேரி சபைக்கு வழங்கியிருந்த மூலதன மானியம் ரூபா 166,248,476 ஆகும். நியமத்தின் 24 ஆம் பந்திக்கு முரணாக, இத்தொகை வருவாய் மானியமாக விரிவான வருமானக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

**(ஒ) இலங்கை கணக்கீட்டு நியமம் 36**

---

நியமத்தின் 9 ஆம் பந்தியின் பிரகாரம், சபையினது சொத்துக்களின் பொருட்டு வருடாந்தம் இழப்பீட்டிற்கான மதிப்பீடு மேற்கொள்ளப்படுவதாக நிதிக்கூற்றினது குறிப்பின் கீழ் சுட்டிக் காட்டியபோதும், அவ்வாறான இழப்பீட்டிற்கான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஓ) இலங்கை கணக்கீட்டு நியமம் 39**

---

நியமத்தின் 46(அ) பந்தியின் பிரகாரம், ஊழியர் கடன் மற்றும் பெற வேண்டியவற்றை அளவிடும்போது பயனுள்ள வட்டி முறையைப் பயன்படுத்தி காலக் கழிவுக் கிரய அடிப்படை பின்பற்றப்பட வேண்டுமெனக் கூறப்பட்டபோதும், சபையினது ஊழியர் உடன்படிக்கையில் உள்ளவாறான வட்டி வீதப்படி கணிப்பிடப்பட்டுக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

**(ஔ) இலங்கை கணக்கீட்டு நியமம் 40**

---

குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள 380.8 ஹெக்டெயார் காணியை நியமத்தின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் முதலீட்டுச் சொத்தாக கணக்கிலிடுவதற்குப் பதிலாக சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்கள் என்பவற்றின் கீழ் கணக்கிலிடப்பட்டிருந்தது.

**(க) இலங்கை கணக்கீட்டு நியமம் 41**

---

(i) நியமத்தின் 43 ஆம் பந்தியின் பிரகாரம் நுகர் மற்றும் தொடர் உயிரியல் விஞ்ஞானச் சொத்து அல்லது முதிர்ச்சி அடைந்த அல்லது முதிர்ச்சி அடையாத உயிரியல் விஞ்ஞானச் சொத்து என உசிதமானவாறு பிரித்து இனங்காணப்பட்டவாறான விபரம் நிதிசார் கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை.

(ii) நியமத்தின் 12 ஆம் பந்தியின் பிரகாரம், வணிக ரீதியான பெறுமதி வாய்ந்த மரங்களை நியாயமான பெறுமதியில் அளவிடுவதற்கு அச்சொத்துக்களது எதிர்காலக் காசுப்பாய்ச்சலது தற்போதைய பெறுமதி பயன்படுத்தப்படுவதாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பில் தெரிவிக்கப்பட்டபோதும், ரூபா 734,086,827 பெறுமதியான மரங்கள் அவ்வாறு பெறுமதியிடப்படவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உயிரியல் விஞ்ஞானச் சொத்துக்களை பெறுமதியிடல் சம்பந்தமாக வெளியிடப்பட்ட 3/2017 ஆம் இலக்க உள்ளகச் சுற்றறிக்கையின் பிரகாரம், ஹாரகம, கரந்தகொல்ல, மிரிஸ்வத்தை கமப் பண்ணைகளில் உள்ள முட்டையிடும் கோழிகள், பொய்லர்கள், சிறு குஞ்சுகள் உள்ளடங்கலாக 34,453 விலங்குகளது பெறுமதி ரூபா 5,759,075 ஆகும். எவ்வாறாயினும், அப்பெறுமதி ரூபா 39,756,301 ஆகக் காட்டப்பட்டமையால் நிதிக்கூற்றுக்களில் உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் ரூபா 33,997,226 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. மேலும், மெனிக்பாலம் கமப் பண்ணையில் இறக்குமதி செய்யப்பட்ட பசுக்களது பெறுமதி ரூபா 25,011,620 அதிகரித்துப் பெறுமதியிடப்பட்டதால் நிதிக் கூற்றுக்களில் பண்ணை விலங்கின வளக் கையிருப்பு அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) ஐந்து கமப் பண்ணைகளில் 07 விலங்கினப் பொருட்களுடன் தொடர்புடைய பண்ணை விலங்கு கையிருப்புக்களது பெறுமதி, மீளாய்வாண்டிற்கான நேரடிச் சரி, பிழை பார்த்தல் அறிக்கைகளில் உள்ளவற்றிலும் ரூபா 4,776,580 குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(இ) உயிரியல் விஞ்ஞானச் சொத்துக்களைப் பெறுமதியிடுவது தொடர்பான 2/2017 ஆம் இலக்க உள்ளகச் சுற்றறிக்கையின் பிரகாரம், ஹொரகேலே கமப் பண்ணையில் மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொண்ட பொருட் கணிப்பின் போது நேரடியாகச் சரி, பிழை பார்க்கப்பட்ட கையிருப்பான 532,735 தேங்காய்களில் 3 சதவீதம் கழிக்கப்பட்டு பெறுமதியிடப்பட்டிருந்தது. மேலும், கூறு ஒன்றிற்கான தற்போதைய சந்தை விலை அல்லது கமப் பண்ணையின் இறுதி ஏல விற்பனை விலை ஆகிய இரண்டில் குறைந்த விலையாகிய ரூபா 37.30 க்குப் பதிலாக ரூபா 61 வீதம் பெறுமதியிடப்பட்டதன் காரணமாக நிதிக்கூற்றுக்களில் இறுதிக் கையிருப்பு ரூபா 12,757,497 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) காணிச் சுவீகரிப்பிற்கான ஆரம்பக் கட்டணமாகிய ரூபா 366,017 சுவீகரிக்கப்பட்ட காணியின் பெறுமதியில் மூலதனமாக்கப்படாது கடன்பட்டோரின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(உ) 2012 ஆம் ஆண்டு தொடக்கம் பாலுக்கான செயற்திட்டத்தில் நிலவி வரும் கையிருப்புக் குறைவானது 2016 சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 10,239,389 ஆகவிருந்தது. அக்குறைவானது 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 19,324,017 ஆகியிருந்தது. இக்கையிருப்புக் குறைவு சம்பந்தமாக 760 ஆம் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொண்டு தேவையான சீராக்கலை நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்வதற்கு மீளாய்வாண்டின்போதும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததால், மீளாய்வாண்டின் இலாபமானது ரூபா 9,084,628 அதிகரித்துக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட சராசரிக் கையிருப்பு மீதியானது ஒவ்வொரு கமப் பண்ணை மற்றும் ஒவ்வொரு செயற்திட்டம் என்பவற்றின் கீழ் காட்டப்பட்ட நேரடிச் சரி, பிழை பார்த்தல் கையிருப்புப் பெறமதியை விட ரூபா 575,912 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(எ) தலைமை அலுவலகம், 32 கமப் பண்ணைகள், 4 செயற்திட்டங்கள் என்பவற்றிற்கு ஒருங்கிணைந்த பரீட்சை மீதி தயாரிக்கப்பட்டிராததுடன் சமர்ப்பிக்கப்பட்ட கமப் பண்ணைக் கணக்குகளில் வகைப்படுத்தல் வழுக்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட வகைப்படுத்தலுக்கான விதிமுறைகளும் இல்லாததால் பரிசீலனைக்குள்ளான கமப் பண்ணைகளது இறுதிக் கணக்குகள் மற்றும் உத்தியோகத்தர்கள் அளித்த விளக்கங்கள் என்பவற்றிற்கு அமைய கணக்குகளைத் தயாரிப்பதில் பின்வரும் குறைபாடுகள் நிலவின.

(i) கமப் பண்ணைகளது கணக்குகளுடன் நாட் குறிப்புச் சான்றிதழ்கள் தயாரிக்கப்பட்டிருக்காமை.

(ii) கமப் பண்ணைகளது கொடுக்கல் வாங்கல்களைக் கணக்கிலிடுவதிலும் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதிலும் ஒரே தன்மையிலான கணக்கீட்டுக் கொள்கை கடைப்பிடிக்கப்படாமை.

(iii) கமப் பண்ணைகளது நிதிக் கூற்றுக்களில் காணப்படும் விடயங்களிலும் அவற்றோடு தொடர்புடைய ஒவ்வொரு பரீட்சை மீதியில் உள்ள மீதிகளுக்குமிடையே இணக்கமின்மை. (வேறுபாடு நிலவியமை)

(ஏ) 2015 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைக் கணக்காய்வு செய்து கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட பின்வரும் விடயங்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் சந்தர்ப்பத்திலும் திருத்தஞ் செய்யப்பட்டிருக்கவில்லை.

(i) 2015 ஆம் ஆண்டிற்கான தேய்மான நிதியேற்பாட்டில் ரூபா 2,882,830 குறைவாகக் காட்டப்பட்டமை.

(ii) இறக்குமதி செய்யப்பட்ட பசுக்களில் 43 பசுக்கள் 2015 ஆம் ஆண்டின்போது இறந்து போயின. அவற்றின் கிரயமான ரூபா 18,661,613 ஆண்டிற்கான இலாபத்தில் பதிவழிப்புச் செய்யப்படாது ரூபா 1,891,167 மாத்திரமே பதிவழிப்புச் செய்யப்பட்டமையால் 2016 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப திரண்ட இலாபம் ரூபா 16,770,446 அதிகரித்துக் காட்டப்பட்டமை.

(iii) 2015 ஆம் ஆண்டின் இறுதியில் தலைமை அலுவலக விற்பனைக் கூடத்தில் ரூபா 766,879 பெறுமதியான 663 வகைப் பொருட்களது கையிருப்பில் நிலவிய குறைவு சம்பந்தமாகத் தேவையான சீராக்கங்களை மேற்கொள்ளாது வர்த்தக மற்றும் ஏனைய கையிருப்பாக் காட்டியமையால் 2016 ஆம் ஆண்டினது ஆரம்ப திரண்ட இலாபம் அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டமை

(iv) 2015 ஆம் ஆண்டின்போது ரூபா 148,172 புத்தகப் பெறுமதியுடைய வாகனம் ஒன்று ரூபா 378,000 க்கு விற்பனை செய்யப்பட்டு அதன் கிரயம் ரூபா 214,190 குறைவாக கைதவிர்ப்புக் கணக்கிற்கு மாற்றஞ் செய்யப்பட்டமையால், சொத்துக் கணக்கும் கைதவிர்ப்பின் மூலம் பெறப்பட்ட இலாபமும் அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தமை.

(ஐ) வெலாட் செயற்திட்டத்திற்கென தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபைக்கும் திறைசேரிக்குமிடையே உருவாகிய மீள்கடன் உடன்படிக்கைப் பிரகாரம் திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்தின் மூலம் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் முதலாம், இரண்டாம் கட்டத்திற்காக முறையே ரூபா 1,963,095,836 மற்றும் ரூபா 3,145,519,017 என மொத்தமாக ரூபா 5,108,614,853 கடனும் அதன் மீதான வட்டி ரூபா 177,176,940 எனவும் உறுதி செய்யப்பட்டிருந்தது. எனினும், 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கடனானது முறையே ரூபா 1,655,132,600 மற்றும் ரூபா 2,807,120,054 என மொத்தமாக ரூபா 4,462,252,654 மற்றும் கடனுக்கான வட்டியாக ரூபா 177,723,371 எனக் கணக்கிலிடப்பட்டமையால் முறையே ரூபா 307,963,236 மற்றும் ரூபா 338,398,963 எனக் கடனது கூட்டுத் தொகை ரூபா 646,362,199 குறைவாகவும் கடனுக்கான வட்டியாகிய ரூபா 546,431 அதிகரித்தும் கணக்கிலிடப்பட்டிருந்தன.

### 2.2.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் தலைமை அலுவலகம், அதற்குரிய கமப் பண்ணைகள், செயற்திட்டங்கள் என்பவற்றுக்கிடையேயான கொடுக்கல் வாங்கல்களைக் குறித்துக் கொள்ளும் நடைமுறைக் கணக்குகள், பணப் பரிமாற்றல் கணக்குகள், ஏனைய கட்டுப்பாட்டுக் கணக்குகள் என்பன அவற்றுடன் தொடர்புடைய ஒவ்வொரு பேரேட்டுக் கணக்குடனும் கணக்கிணக்கஞ் செய்யப்பட்டு சீராக்கல் செய்யப்படாமையால் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் 518 பேரேட்டுக் கணக்குகளில் ஏற்பட்ட இணக்கமின்மை ரூபா 4,938,627,905 ஆகும்.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு தலைமை அலுவலகம் மற்றும் செயற்திட்டங்கள் என்பவற்றிற்கு இடையேயும் ஒவ்வொரு செயற்திட்டத்திற்கிடையேயும் கட்டுப்பாட்டுக் கணக்குகள் கணக்கிணக்கஞ் செய்யப்படாமையால் பின்வரும் மீதிகள் இணங்கியிராமை அவதானிக்கப்பட்டன.

(i) தலைமை அலுவலகத்தின் ஏடுகளில் தலைமை அலுவலகம் மற்றும் ஒவ்வொரு செயற்திட்டம் என்பவற்றுக்கிடையே உள்ள 03 கட்டுப்பாட்டுக் கணக்குகளில் ரூபா 45,210,173 வரவு மீதியும் 04 கட்டுப்பாட்டுக் கணக்குகளில் ரூபா 31,073,532 செலவு மீதியும் செயற்திட்ட ஏடுகளில் ஒவ்வொரு செயற்திட்டத்திற்கும் தலைமை அலுவலகத்திற்குமிடையேயான 2 கட்டுப்பாட்டுக் கணக்குகளில் ரூபா 10,733,014 வரவு மீதியும், 5 கட்டுப்பாட்டுக் கணக்குகளில் ரூபா 44,277,801 செலவு மீதியுமிருந்தன.

(ii) கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் செயற்திட்டங்களுக்கிடையே ரூபா 18,750,912 வரவு மீதியும் 5 கட்டுப்பாட்டுக் கணக்குகளில் ரூபா 21,397,957 செலவு மீதியுமிருந்தன.

(இ) மீளாய்வாண்டில் பாலுக்கான செயற்திட்டக் கணக்கு மற்றும் பார்ம் ஷொப் கணக்கு என்பவற்றின் கீழ் முறையே 11 கமப் பண்ணைகளும் 7 கமப் பண்ணைகளுக்குமென நடைமுறைக் கணக்கு மற்றும் வைப்புக் கணக்கு என்பவற்றின் கீழ் கொடுக்கல் வாங்கல்களைக் குறித்துக் கொள்வதற்குப் பதிலாக பாலுக்கான செயற்திட்டம் மற்றும் பார்ம் ஷொப் கணக்குகளில் கமப் பண்ணைக் கடன் கொடுத்தோராக முறையே ரூபா 13,296,469 கூட்டுத் தொகையும் ரூபா 1,132,494 கூட்டுத் தொகையும் காட்டப்பட்டிருந்தன.

**2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 17 கமப் பண்ணைகளது வர்த்தகக் கடன்பட்டோர் மீதி ரூபா 51,352,663 ஆகியபோதும், சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையின் பிரகாரம் அம்மீதி ரூபா 36,966,128 ஆகியமையால் ரூபா 14,386,535 விளக்கமளிக்கப்படாத வேறுபாடு நிலவியது.

**2.2.5 கணக்காய்விற்கான சான்றின்மை**

பின்வரும் விடயங்களுக்கெதிரே சுட்டிக் காட்டப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக் கொள்ளவோ முடியாதிருந்தது.

| **கணக்கீட்டு விடயம்** | | | **பெறுமதி** | **சமர்ப்பிக்கப்படாத சான்று** |
|---|---|---|---|---|
| | | | **ரூபா** | |
| (அ) | காணி – 10,241.84 ஹெக்டயார் | | 225,189,438 | உரித்தை உறுதி செய்வதற்கான குத்தகை உடன்படிக்கை |
| (ஆ) | உயிரியல் விஞ்ஞானச் சொத்துக்கள் | | | |
| | (i) | தென்னைகளின் கீழ் / புதிய பயிர்ச் செய்கை | 681,802,453 | |
| | (ii) | மரமுந்திரிகைப் பயிர்ச் செய்கை | 1,356,806 | |
| | (iii) | இறப்பர் பயிர்ச் செய்கை | 20,409,767 | ஒட்டுமொத்த மீதியின் பொருட்டும் ஒவ்வொரு கமப் பண்ணைக்குமான பட்டோலையும் கையிருப்புகளைப் பெறுமதியிடும் அறிக்கைகளும் |
| | (iv) | புற்பாத்திகளை நிறுவுதல் | 29,147,027 | |
| | (v) | ஏனைய பயிர்ச் செய்கை | 1,370,774 | |
| | (vi) | 09 கமப் பண்ணைகளின் 08 வகை விலங்குகள் | 99,148,658 | கையிருப்பைப் பெறுமதியிடும் அறிக்கை |
| (இ) | நடைமுறை அல்லாத சொத்துக்கள் - ஆண்டின் போதிலான சேர்ப்புகள் | | | |
| | (i) | இயந்திரங்களும் உபகரணங்களும் | 2,462,967 | பொருட் கொள்வனவு வழிகாட்டலைக் கடைப்பிடித்ததை உறுதி செய்வதற்கான கோவைகளும் செலவினத்தைச் சரி, பிழை பார்ப்பதற்கான சான்றுகளும் |
| | (ii) | அமைப்புகள் | 8,622,341 | |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்த கடன்பட்டோர் | | | |
| | (i) | மஹாவலி பண்ணை விலங்கு அபிவிருத்திக் கம்பனி | 4,975,934 | பெற வேண்டியதை உறுதி செய்வதற்கான எழுத்து மூலச் சான்றும் மீதிகளை உறுதிப்படுத்தலும் |
| | (ii) | வரிசை அமைச்சு | 10,512,864 | |
| | (iii) | கந்தளாய் இலங்கை வங்கிக் கிளையிலிருந்து பெற வேண்டியுள்ள 2009 தொடக்கமாகவுள்ள மீதி | 2,092,150 | விரிவான பட்டோலையும் மீதிகளை உறுதிப்படுத்தலும் |
| | (iv) | ‘‘பார்ம் ஷொப்’’ ‘‘பழையது’’ என்பதன் கீழ் பெற வேண்டிய மீதி | 2,770,757 | |
| | (v) | தேங்காய் தரகர்களது கடன்பட்டோர் மீதி | 10,678,072 | மீதிகளை உறுதிப்படுத்தல் |
| | (vi) | 2007 ஆம் ஆண்டில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்குக் கொடுப்பனவு செய்த ஆரம்பக் கட்டணம் | 366,017 | |
| (உ) | 05 ஆண்டுகளுக்கு மேற்படாத கடன்பட்டோர் | | | |
| | (i) | வர்த்தக மற்றும் ஏனைய கடன்பட்டோர் | | |
| | | 7 கமப் பண்ணைகள் | 8,364,901 | விரிவான பட்டோலையும் மீதிகளது விரிவான பட்டோலையும் |
| | | 2 செயற்திட்டங்கள் | 132,445 | |
| | (ii) | பதவியணிக் கடன்பட்டோர் | | |
| | | உற்பத்திப் பொருள் விற்பனை மூலம் | 3,589,115 | விரிவான பட்டோலை |
| | | கடனுக்கான முற்பணம் | 26,434,718 | |
| | (iii) | தேங்காய் தரகர்களின் கடன்பட்டோர் மீதி | 11,606,510 | மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் |
| | (iv) | தேங்காய்களுக்கான கடன்பட்டோரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தண்டப் பணம் | 4,265,733 | காலப் பகுப்பாய்வு |
| (ஊ) | முன்னைய ஆண்டுகளுக்கான சீராக்கல்கள் | | 202,270,951 | நாட்குறிப்பு, கணக்கிணக்கக்கூற்று |
| (எ) | ஊழியர் கடன் கொடுத்தோர், வர்த்தக மற்றும் ஏனைய கடன் கொடுத்தோர் - 8 கமப் | | 105,128,563 | விரிவான பட்டோலை |

பண்ணைகள்

| | | |
|---|---|---|
| (ஏ) | பாலுக்கான செயற்திட்டத்துடன் தொடர்புடைய நிலையான சொத்துக்களும் மூடப்பட்டுள்ள 109 விற்பனைச் சாலைகளில் உள்ள நிலையான சொத்துக்களும் | - நிலையாக சொத்துப் பதிவேடு, பொருட் பட்டோலை, சொத்துக்கள் இருப்பதை உறுதி செய்வதற்கான சான்றுகள் |

(ஐ) சபையானது ரூபா 184,854,794 க்கான கடன்பட்டோர் மீதிகளை உறுதி செய்வதற்கு 195 கடிதங்களை அனுப்பியுள்ளது. அதில் 13 கடிதங்களுக்கு மாத்திரம் ரூபா 463,343 மீதியை உறுதி செய்வதற்கான கடிதங்கள் பெறப்பட்டுள்ளன. கொவுல்வெவ கமப் பண்ணையால் தோட்ட ஊழியர் கூட்டுறவுச் சங்கத்தின் ரூபா 355,804 மீதியை உறுதி செய்யுமாறு அனுப்பி வைக்கப்பட்ட மீதியை உறுதி செய்யும் கடிதத்திற்கு அவ்வாறான மீதி இல்லை எனப் பதில் வழங்கப்பட்டுள்ளது. ஏனைய 15 கடிதங்களைக் குறிக்கும் ரூபா 1,365,372 க்கான விலாசம் தவறானதால் அவை திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

## 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தலைமை அலுவலகம், 31 கமப் பண்ணைகள், பிரதேச அலுவலகங்கள் மற்றும் 5 செயற்திட்டங்களின் கீழ் மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 வரையான வர்த்தக மற்றும் ஏனைய கடன்பட்டோர் மீதி ரூபா 184,854,794 ஆகும். இதில் ஓராண்டிற்கு மேற்பட்ட கடன் மீதி ரூபா 97,368,070 ஆகும். அதில் மொத்தக் கடன்பட்டோரினது 17.3 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 32,018,611 ஐந்து ஆண்டுகளைக் கடந்ததாகும்.

(ஆ) மரணமடைந்த, இறக்குமதி செய்யப்பட்ட பசுக்களுக்கான காப்புறுதி இழப்பீட்டுத் தொகையாக 2013 முதல் பெற வேண்டியிருந்த ரூபா 19,253,926 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை 2017 மே 31 வரை மேற்கொள்ளப்படாதிருந்தது.

(இ) 2015 ஆம் ஆண்டில் பண்ணை விலங்குச் சபை சுவீகரித்த மஹாவலி பண்ணை விலங்குக் கம்பனியின் ரூபா 8,503,519 கடன் மீதியானது 3 ஆண்டுகளுக்கு மேலாக அறவிடப்படாதிருந்தது.

(ஈ) பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிலிருந்து 2011 தொடக்கம் அறவிடப்பட வேண்டிய ரூபா 3,801,787 மீதியில் ரூபா 111,963 மாத்திரமே மீளாய்வாண்டின்போது அறவிடப்பட்டிருந்தது. எஞ்சிய மீதியான ரூபா 3,689,824 மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 வரை அறவிடப்படாதிருந்தது. மேலும், 2011 நவம்பர் 02 ஆந் திகதி கொடுப்பனவு செய்யப்பட்ட மேற் குறித்த மீதியில் உள்ளடங்கிய ரூபா 2,957,521 க்கு அமைச்சினது செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டபோதும், அந்த அங்கீகாரமானது கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. சபையின் நோக்கங்களுக்கு அப்பாற்பட்டவாறு அக்கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) சபையின் உற்பத்திப் பொருட்களைச் சபை ஊழியர்களுக்கிடையே விற்பனை செய்ததன் மூலம் ஏற்பட்ட கடன்பட்டோர் மீதியாகிய ரூபா 1,530,648 ஓராண்டிற்கு மேலாக அறவிடப்படாதிருந்தது.

(ஊ) தெங்கு அபிவிருத்திச் சபையால் நடாத்தப்படும் தேங்காய் ஏல விற்பனைகளின் போது அதிகாரசபை வெளியிட்டுள்ள பிரமாணக் கோவைக்கு ஏற்ப சபை நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையால் தரகர்களிடமிருந்து 5 ஆண்டுகளுக்கு மேலாக அறவிடப்பாதிருந்த கடன் மீதி ரூபா 10,678,072 ஆகும். அத்தோடு, 3 ஆண்டுகளுக்கு மேற்பட்டதும் 5 ஆண்டுகளுக்கு குறைவானதுமான கடன் மீதியாகிய ரூபா 3,855,731 உள்ளடங்கலாக ரூபா 22,284,582 கூட்டுத் தொகையுடைய கடன் மீதி அறவிடப்படாதிருக்கையில் அத்தரகர்களுக்குத் தொடர்ச்சியாக தேங்காய் விற்பனை செய்யப்பட்டிருந்தது

(எ) தலைமை அலுவலகம், 32 கமப் பண்ணைகள், 2 செயற்திட்டங்கள் என்பவற்றின் கீழ் மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர், வர்த்தக மற்றும் ஏனைய கடன் கொடுத்தோர் மீதி ரூபா 517,416,862 ஆகும். இதில் ஓராண்டிற்கு மேற்பட்ட கடன் கொடுத்தோர் தொகை ரூபா 146,148,298 ஆகும். அதில் 25 சதவீதமான ரூபா 128,372,854 ஐந்து ஆண்டுகளைக் கடந்ததாகும்.

(ஏ) கமப் பண்ணைகளுக்கு விலங்கின உணவுகளை வழங்கியமைக்காக தனியார் கம்பனி ஒன்றிற்குக் கொடுப்பனவு செய்ய வேண்டிய 12 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்த கடன் மீதி ரூபா 26,746,567 மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்த மீதியாகிய ரூபா 279,450 மற்றும் முகவர்களிடமிருந்து பெற்றிருந்த 2 ஆண்டுகளாக நிலவி வரும் ரூபா 2,009,370 முற்பணம் என்பவற்றைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2003 ஆம் ஆண்டின்போது விவசாயிகளது நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து சபை பெற்றிருந்த கடன் ரூபா 102,662,750 ஆகும். இதில் 13 ஆண்டுகளாக நிலுவையாக உள்ள கடன் மீதி ரூபா 93,612,700 ஆகும். அதற்கான ரூபா 87,757,178 வட்டியுடன் மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்த மொத்தத் தொகை ரூபா 181,369,878 ஆகும்.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், சபையின் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேறு ரூபா 9,487,130 மிகை ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 34,840,106 ஆகும். இதனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேறு ரூபா 25,352,976 நலிவுக்குள்ளாகியிருந்தது. செயற்பாட்டு வருமானம் ரூபா 768,047,375 அதிகரித்தும் ஏனைய வருமானம் ரூபா 11,693,880 அதிகரித்திருந்தபோதும் அரசாங்க மானியத்தில் ரூபா 35,791,275 குறைவும் விற்பனைக் கிரயம், நிர்வாகச் செலவினம், நிதிசார் செலவினம் என்பன முறையே ரூபா 607,107,075, ரூபா 151,437,450, ரூபா 33,245,554 அதிகரித்தமையுமே மேற்படி நலிவுக்கான பிரதான காரணமாகும்.

மேலும், மூலதன மானியமாகிய ரூபா 24,729,602 வருவாய் மானியமாகக் கணக்கிலிடப்பட்டமையால் மீளாய்வாண்டினது நிகர இலாபம் அதேயளவு அதிகரித்துக் கணிப்பிடப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்கையில், 2012 ஆம் ஆண்டின் நட்டம் ரூபா 26.29 மில்லியனானதுடன் 2013 ஆம் ஆண்டில் அது மேலும் ரூபா 86.08 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. எனினும், 2014, 2015 ஆம் ஆண்டுகளின்போது அந்நட்டமானது முறையே ரூபா 60.23 மில்லியன் மற்றும் ரூபா 34.84 மில்லியன் வரை குறைந்திருந்ததுடன், மீளாய்வாண்டில் ரூபா 9.487 மில்லியன் மிகை ஏற்பட்டுமிருந்தது. எவ்வாறாயினும், நிதிப் பெறுபேற்றில் ஊழியர்களது ஊதியம், அரசாங்கத்திற்குச் செலுத்திய வரி, நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான தேய்மானம் என்பவற்றை மீண்டும் சீராக்கல் செய்கையில் 2012 ஆம் ஆண்டில் ரூபா 110.18 மில்லியனாக இருந்த சபையின் பங்களிப்பு மீளாய்வாண்டினது இறுதியில் உள்ளவாறு ரூபா 263.77 மில்லியன் வரை அதிகரித்திருந்தது.

**3.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு**

| | ஆண்டு<br>2016 | 2015 | 2014 | 2013 | 2012 | 2011 |
|---|---|---|---|---|---|---|
| நடைமுறை விகிதம் | 0.37 | 0.42 | 0.79 | 0.99 | 1.11 | 1.31 |
| துரித விகிதம் | 0.21 | 0.24 | 0.51 | 0.66 | 0.73 | 0.65 |
| மொத்த இலாப விகிதம் | 32.38% | 37.25% | 37.32% | 34.31% | 14.35% | 29.60% |
| கடன்பட்டோர் புரள்வு விகிதம் | 0.33% | 1.85% | 3.12% | -6.70% | 2.09% | 19.00% |
| நிகர இலாப விகிதம் | 16.92 | 11.86 | 9.86 | 6.14 | 7.90 | 21.20 |
| நிலையான சொத்துப் புரள்வு விகிதம் | 0.91 | 0.85 | 1.23 | 0.94 | 1.34 | 3.98 |
| தளர்ச்சி விகிதம் | 3.35 | 3.47 | 1.76 | 1.99 | 1.16 | 0.34 |
| கடன்பட்டோர் சேகரிப்புக் காலம் | 21.57 | 30.77 | 37.01 | 59.43 | 46.20 | 17.21 |

2013 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு வரை சபையின் திரவவியல் விகிதம் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்திருந்தது. எதிர்வரும் 12 மாதங்களின்போது கொடுப்பனவு செய்யப்படவுள்ள கடனின் அளவு தொடர் அதிகரிப்புக்குள்ளானமை அதற்கான பிரதான காரணமாக இருந்தது. அதற்கமைய, திரவவியல் பிரச்சினைகள் ஏற்படக்கூடிய வாய்ப்பிருந்தமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது. மேலும், நிதிசார், நிர்வாகச் செலவினம் என்பன அதிகரித்ததன் காரணமாக சபையின் நிகர இலாப விகிதம் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் கிரமமாகக் குறைவடைந்திருந்தது. வெலாட் செயற்திட்டம் மற்றும் ஏனைய நெடுங்காலக் கடன் என்பவற்றின் காரணமாக சபை அதிக தளர்ச்சியான நிலமைக்கு உட்பட்டிருந்தது. அதற்கமைய, திரவவியல் அபாயமும் அதிக தளர்ச்சியும் காரணமாக சபை தொடர்ந்து இயங்குவது பிரச்சினைக்குரியதாகலாம் எனக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

**3.3 நிறுவனத்திற்கெதிராக அல்லது நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டபூர்வ நிகழ்வுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விற்பனை உடன்படிக்கையின் பிரகாரம் கொடுப்பனவுகளைப் புறக்கணித்தமைக்காக தனியார் கம்பனி ஒன்றிற்கு எதிராக ரூபா 2,093,175 இழப்பீடு கோரி வழக்கொன்றும் மரதவில காணி ஒன்றினது உரித்திற்காக 2 வெளி நபர்களுக்கு எதிராக சபையால் 2 வழக்குகளும் தொடரப்பட்டிருந்தன. மேலும், அத்துமீறிய பயிர்ச்செய்கை இடம்பெறும் காணியையும் 2 கற்குழிகளையும் மீளப்பெறுவற்காக அந்நபர்களால் தொடரப்பட்ட 4 வழக்குகளுடன் சபையின் 07 ஊழியர்கள் தமது சேவையை இடை நிறுத்தியமைக்காக எதிராகத் தொடுத்த 07 வழக்குகளும் பொலிஸ் மற்றும் மாவட்ட நீதிமன்றம் என்பவற்றால் தொடரப்பட்ட 02 வழக்குகளும் என சபைக்கெதிராக வெளி நபர்களால் 13 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

(ஆ) தனியார் நிறுவனம் ஒள்றிற்கு விற்பனைக்காக வழங்கப்பட்ட சோளத்திற்கு சபையால் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 11,947,220 அறவிடப்படுவதன் பொருட்டு பிஸ்கல் நடவடிக்கையை மேற்கொள்வதென சட்ட மா அதிபர் திணைக்களம் தீர்மானித்திருந்தது. எனினும், 2016 யூன் 30 ஆந் திகதியளவிலும் அதனை அறவிட முடியாதவாறிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க அரச கமத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு மற்றும் 1975 பெப்ரவரி 14 ஆந் திகதிய 151 ஆம் இலக்க வர்த்தமானிப் பிரசுரத்தில் உள்ள திருத்தங்களுக்கமைய சபை மேற்கொள்ள வேண்டிய பணிகள் பின்வருமாறாகும்.

(i) நியாயமான விலையில் இறைச்சிக்கான விலங்குகளைக் கொள்வனவு செய்வதற்கான நிலையத்தை உருவாக்குதல்.

(ii) உற்பத்திப் பொருட்களை ஒழுங்குபடுத்தலும் விற்பனை செய்தலும்

(iii) அறுவை செய்யப்பட்ட விலங்குகளை வழங்குவதற்காக பிரதேச ரீதியான அறுவை நிலையங்களை அமைத்தல், அவ்விடத்திற்கு அவற்றை கொண்டு செல்லுதல் மற்றும் இனங்காண்பதன் பொருட்டு முத்திரை பொறிக்கப்பட்ட அவற்றை அறுவை நிலையங்களிலிருந்து அதிகாரம் பெற்ற வர்த்தகர்களுக்கு அனுப்பி வைத்தல்

(iv) இறைச்சி மற்றும் இறைச்சி வகைப் பொருட்களை உற்பத்தி செய்தல், ஒழுங்குபடுத்தல், மற்றும் சந்தைப்படுத்தல், விற்பனைக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் மற்றும் அப்பணிகளை முறைப்படுத்துவதற்கும் துணை உற்பத்திப் பொருட்களின் அதி கூடிய பயனைப் பெறுவதற்கும் வழிவகைகளை ஏற்படுத்துதல்.

(v) விற்பனையின் பொருட்டு அதிகாரம் பெற்ற வர்த்தகர்களுக்கு விநியோகிப்பதற்காக விற்பனைக்குப் பொருத்தமானவாறு துண்டுகளாக வெட்டி சிறந்த இறைச்சியை பெக்கட்களில் அடைப்பதும் விலையைக் குறிப்பதும்.

(vi) விலங்குகளை வளர்ப்பதற்கு தேவையான (குஞ்சு பொறிப்பன அடங்கலாக) விலங்கினப் பெருக்கத்திற்கான விலங்குகள், மருந்துகள், இயந்திரங்கள், உபகரணங்கள் போன்றவற்றை இறக்குமதி செய்வதும் வழங்குதலும்.

(vii) சபையின் சாதாரண இயக்கத்திற்கு இணைவாக சபையால் தொழிற்படும் விதத்தில் நடாத்தப்படக்கூடியதாக சபையும் சபையின் பணிப்பாளர்களும் கருதும் விலங்கினக் கட்டுப்பாட்டுக் கமப் பண்ணைகள் மற்றும் வேறு பணிகளை ஆரம்பிப்பதும் அவற்றை நடாத்துதலும்.

மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் சபையினது நோக்குடனான பணிகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றம் சம்பந்தமாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மேற்படி பணிகளுள், இறைச்சிக்காக விலங்குகளைக் கொள்வனவு செய்வதற்கான நிலையங்களை அமைத்தல், விலங்குகளது இறைச்சியை வழங்குவதற்கு பிரதேச ரீதியாக அறுவை நிலையங்களை உருவாக்குதல், கொண்டு செல்லல் மற்றும் இனங் காண்பதன் பொருட்டு முத்திரை பொறிக்கப்பட்ட அறுவைக்குள்ளான இறைச்சியை அறுவை நிலையங்களிலிருந்து அதிகாரம் பெற்ற வர்த்தகர்களுக்கு அனுப்பி வைத்தல் போன்ற பணிகளை சபை தற்போது மேற்கொள்வதில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான 32 கமப் பண்ணைகளது 2016 ஆம் ஆண்டிற்காக செயல் முன்னேற்ற அறிக்கைகளினூடாக பண்ணை விலங்குகளது உருப்படி முன்னேற்றம் மாத்திரமே சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், கமப் பண்ணைகளது விவசாய, ஏனைய பயிர்ச் செய்கைகள், நிர்மாண வேலைகள் என்பவற்றினது முன்னேற்றமும் தலைமை அலுவலகத்தினதும் சபையின் செயற்திட்டங்களது முன்னேற்றமும் அடங்கலாக நிறுவனத்தின் ஒட்டுமொத்த உருப்படி மற்றும் நிதிசார் முன்னேற்றத்தைக் காட்டும் செயல் முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2016 ஆம் ஆண்டு தொடர்பாக கணக்காய்விற்குச் சபையால் சமர்ப்பிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் என்பவற்றை ஒன்றுடனொன்று ஒத்துப் பார்க்கையில் 32 கமப் பண்ணைகளது 09 செயற் திட்டங்களின் கீழ் 382 நடவடிக்கைகள் சம்பந்தமாகப் பின்வரும் விடயங்கள் தெரிய வந்தன.

(i) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கிய 20 கமப் பண்ணைகளது 08 செயற்திட்டங்களது 54 நடவடிக்கைகள் 2016 ஆம் ஆண்டின்போது அமுலாக்கப்பட்டிராததுடன் 25 கமப் பண்ணைகள் மற்றும் 08 செயற்திட்டங்கள் தொடர்பான 68 நடவடிக்கைகளது முன்னேற்றம் 1 முதல் 49 சதவீதமாக இருந்தது. அதற்கமைய, குறித்த பணிகள் அமுலாக்கப்பட்டிராமை மற்றும் முறைப்படி நிறைவேற்றப்பட்டிராமைக்கான காரணம் குறிப்பிடப்படவில்லை.

(ii) 2016 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் 04 கமப் பண்ணைகளது 03 செயற்திட்டங்கள் தொடர்பாக உள்ளடக்கப்பட்ட 04 செயற்பாடுகள் செயலாற்றல் அறிக்கையின் இலக்குகளுடன் ஒத்து வரவில்லை.

(iii) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கிய 03 கமப் பண்ணைகளது 02 செயற்திட்டங்களின் 07 செயற்பாடுகள் தொடர்பாக எதுவித தகவலும் வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கிய 09 கமப் பண்ணைகளது 05 செயற்திட்டங்கள் தொடர்பான 14 நடவடிக்கைகளுக்கும் 2016 ஆம் ஆண்டிற்கான இலக்குகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்

(அ) சபைக்குச் சொந்தமான 32 கமப் பண்ணைகளில் ஒன்று பயிற்சி நிலையமாகச் செயற்பட்டிருந்தது. ஏனைய கமப் பண்ணைகளுள் கடந்த 05 ஆண்டுகளின் போது 19 கமப் பண்ணைகள் இலாபத்தில் இயங்கியும் 12 கமப் பண்ணைகள் தொடர்ச்சியாக நட்டத்தில் இயங்கியுமிருந்தன. அதற்கமைய, மீளாய்வாண்டு அடங்கலாக கமப் பண்ணைகளில் ஏற்பட்ட திரண்ட நட்டம் ரூபா 661,307,034 ஆகும். இவ்வாறு தொடர் நட்டத்திற்குள்ளாகும் கமப் பண்ணைகள் நட்டம் அடைவதற்கான காரணத்தைக் கண்டறிந்து இலாபமீட்டுமாறு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை சபை மேற்கொள்ளவில்லை. மேலும், 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பசுக்களை இறக்குமதி செய்யும் செயற்திட்டத்தின் I ஆம் கட்டம் அமுலாக்கப்பட்ட போப்பத்தலாவ, டயகம மற்றும் மெனிக்பாம் ஆகிய கமப் பண்ணைகளும் தொடர் நட்டத்திற்குள்ளாகி மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு மொத்தமாக ரூபா 174,150,906 நட்டத்திற்குள்ளாகியிருந்தன.

(ஆ) வெலாட் றூரல் எக்ஸ்போர்ட் தனியார் கம்பனி ஒன்றுடன் 2 ஆம் கட்டத்தின் கீழ் சபை பசுக்களை இறக்குமதி செய்வதற்காக முதலாவது கட்டத்தின் கீழ் 2010 ஆகஸ்ட் 19 ஆந் திகதி 12,944,058 அமெரிக்க டொலர்களுக்கும் இரண்டாவது கட்டத்தின் கீழ் 2014 யூலை 24 ஆந் திகதி 20,747,293 அமெரிக்க டொலர்களுக்குமென 2 உடன்படிக்கைகளில் ஈடுபட்டிருந்தது. அது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளபடுகின்றன.

(i) மேற்படி கடனுக்கு 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு சபை செலுத்த வேண்டியிருந்த தவணைப் பணமும் வட்டியும் ரூபா 1,339,517,078 ஆகும். மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 24,812,576 வட்டி மாத்திரமே செலுத்தப்பட்டிருந்தது. முதலாம், இரண்டாம் கட்டங்களின் கீழ் பெறப்பட்ட பசுக்களுக்கு நாளாந்தம் பெருமளவு தொகையைச் சபை செலவிட வேண்டி ஏற்பட்டதால் இத்தவணைப் பணத்தைச் சபை செலுத்துவது இலகுவானதல்ல என என்எல்டிபீ/எப்ஐஎன்/024/98 இலக்கமுடைய 2017 டிசெம்பர் 22 ஆந்

திகதிய கடிதத்தின் மூலம் சபையின் தலைவர் கணக்காய்விற்குத் தெரிவித்திருந்தார.

(ii) 2014 யூலை 24 ஆந் திகதிய சபைக்கும் தனியார் கம்பனிக்கும் இடையேயான உடன்படிக்கைப் பிரகாரம், வெலாட் செயற்திட்டத்தின் II ஆம் கட்டம் அமுலாகுவதற்கு முன்பு நியமிக்கப்பட்ட குழுவின் தீர்மானம் நிதி அமைச்சரினது இணக்கத்துடன் அமுலாக்கப்படுவதன் பொருட்டு 2015 மே 28 ஆந் திகதி அமைச்சரவைத் தீர்மானம் வழங்கப்பட்டிருந்தபோதும், அம்முன்மொழிதல் முறைப்படி அமுலாகவில்லை. விபரம் வருமாறு.

- ஜேர்சி வகைப் பசுக்களை இயலுமானளவு அதிகளவில் வழங்குவதற்குக் கம்பனி இணங்கியதாக உடன்படிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தபோதும், 2015 யூலை 13 ஆந் திகதியன்று இந்நாட்டிற்குக் கொண்டுவரப்பட்ட 1181 பசுக்களில் 532 பசுக்களும் 2015 ஒக்டோபர் 12 ஆந் திகதி இந்நாட்டிற்குக் கொண்டுவரப்பட்ட 1314 பசுக்களில் 521 பசுக்களும் மாத்திரமே ஜேர்சி வகையைச் சேர்ந்தனவாகும்.

- கடனை திருப்பிச் செலுத்தும் முறை விசேட குழுவினால் தீர்மானிக்கப்பட வேண்டுமென முன்மொழியப்பட்டிருந்தும், கணக்காய்வுத் தினமான 2017 பெப்ரவரி 08 ஆந் திகதி வரை அக்குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

- ரிதீகம கமப் பண்ணையில் விலங்கினங்களை நெடுங்காலமாக வைத்திருப்பதாயின் செயற்கையான சூழலை உருவாக்குவதற்குத் தேவையான மின்சாரத்திற்கு ஏற்படும் செலவினக் கிரயத்தைக் (2015 ஆம் ஆண்டில் ரூபா 5,729,028 ஆகியதுடன் 2016 ஆம் ஆண்டில் ரூபா 39,993,949 வரை அதிகரித்திருந்தது) குறைப்பதற்கு மாற்று வழிகளை (சூரியசக்தி) உபயோகப்படுத்தலாம் என முன்மொழியப்பட்டிருந்தும் 2017 யூலை 31 வரை அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) இச் செயற்திட்டத்தின் பணிகளைக் கண்காணித்தல், செயற்படுத்தல் மற்றும் நிதி முகாமைத்துவம் ஆகிய பணிகளுக்கு குறித்த விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு, பண்ணை விலங்கு அபிவிருத்தி அதிகார சபை, விலங்கின உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், வெலாட் றூரல் எக்ஸ்போர்ட் தனியார் கம்பனி மற்றும் நிதி அமைச்சு ஆகியவற்றின் முகவர்களினூடான செயற்பாட்டுக் கூறு ஒன்றை நியமிப்பதென சிபார்சு வழங்கப்பட்டிருந்தது. எனினும், அக்குழு நியமிக்கப்படவில்லை. அக் குழுவினது சிபார்சின்படி உபயோகப்படுத்துவதற்குக் குறிப்பிடப்பட்டிருந்த மனிதவள அபிவிருத்தி, நிகழ்ச்சித் திட்டங்களை உள்ளடக்கிய கண்காணிப்புச் செலவினம், உதிரிப் பாகங்களையும் உள்ளடக்கிய கமப் பண்ணைகளது பராமரிப்பு, தொழில்நுட்ப பராமரிப்பு மற்றும் ஆற்றலை மேம்படுத்தும் செலவினம் என்பவற்றிற்கான உடன்பாடுகளுக்குள்ளான ரூபா 70,690,202 க்குச் சமமான ($) 506,333 அமெரிக்க டொலரானது அச்சிபார்சில்லாமலேயே செலவழிக்கப்பட்டிருந்ததுடன், அச் செலவினத்தை உறுதி செய்வதற்கான ஆவணச் சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(iv) 2015 மே 28 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கான 2015 மே 20 ஆந் திகதிய நிதி அமைச்சினது குறிப்பில் 2019 ஆம் ஆண்டு வரை தொழில்நுட்பச் சேவைகளை வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்தபோதும், கால நீடிப்புக்கான உடன்படிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. செயற்திட்டம் நிறைவேறியதாகவும் வேலை திருப்திகரமாக முடிவடைந்ததாகவும் சான்றிதழ் வழங்கப்படாது ரூபா 152,355,158 க்குச் சமமான 1,037,135 அமெரிக்க டொலரான மொத்த நிறுத்தி வைத்த கட்டணமும் வழங்கப்பட்டிருந்தது.

(v) இச் செயற்திட்டத்தின் 2 ஆம் கட்டம் 2014 யூலை 14 தொடக்கம் 2 ஆண்டுகளுக்குள் நிறைவேற்றப்படுவதற்கு தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி அதிகாரசபையும் வெலாட் றூரல் எக்ஸ்போர்ட் கம்பனியும் உடன்படிக்கையில் ஈடுபட்டிருந்தன. அதற்கமைய, ஒரு பசு 3032.87 அமெரிக்க டொலர் வீதம் 2,500 பசுக்களை இறக்குமதி செய்வதற்கு இணக்கம் காணப்பட்டபோதும், 2015 ஆம் ஆண்டில் யூலை 13 மற்றும் ஒக்டோபர் 12 ஆந் திகதிகளில் 2,495 பசுக்கள் மாத்திரமே இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. நிறுத்தி வைத்த பணம் உள்ளடங்கலாக 2016 ஒக்டோபர் 11 ஆந் திகதியளவில் உடன்படிக்கைக்குள்ளான 7,576,101.28 அமெரிக்க டொலரை விட 9098.59 அமெரிக்க டொலர்கள் அதாவது, ரூபா 1,336,583 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 4.3 முகாமைத்துவச் செயற்பாடுகள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாலுக்கான செயற்திட்டத்திற்கமைய விற்பனை அங்காடிகளை ஆரம்பிப்பதற்கு முதலாவது சாத்தியக் கூறு ஆய்வு மேற்கொள்ளப்படாமையால், 2002 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 152 விற்பனை அங்காடிகளில் 43 விற்பனை அங்காடிகளே மீளாய்வாண்டு முடிவில் செயற்பட்டவாறிருந்தன. அவற்றுள் 19 விற்பனை அங்காடிகளில் மீளாய்வாண்டின்போது ஏற்பட்ட இழப்பு ரூபா 2,459,924 ஆகும்.

(ஆ) அம்பேவெல கமப் பண்ணையின் பொருட்டு 1992 ஆம் ஆண்டின்போது பொதுத் திறைசேரியிடமிருந்து பெற்ற வட்டியில்லாக் கடன் ரூபா 50,000,000 ஆகும். 2001 ஒக்டோபர் 03 ஆந் திகதிய தனியார் மயமாக்கலின்போது அத் தொகை தீர்த்து வைக்கப்படவில்லை. கடனை எதிர் காலத்தில் திருப்பிச் செலுத்துவதற்கான நடவடிக்கைகளும் 2017 ஆகஸ்ட் 31 வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2016 பெப்ரவரி 11 ஆந் திகதிய அமப/16/0125/732/004 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், இலங்கை இராணுவ நிர்வாகத்தின் கீழ் இருந்த கந்தகடுவ மற்றும் திரிகோணமடு கமப் பண்ணைகள் ஆகியவற்றை மீண்டும் சபை பொறுப்பேற்பதற்குத் தீர்மானிக்கப்பட்டபோதும், மீளாய்வாண்டு இறுதியளவிலும் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படாததுடன், நிதிசார் கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்படவுமில்லை.

## 4.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கந்தளாயில் உள்ள கரும்புச் செய்கை காணியில் 1,000 ஏக்கர் சோளத்தை விதைக்கும் செயற்திட்டத்திற்கு கிழக்கு நவோதயவின் கீழ் சுழற்சி நிதியம் ஒன்றை உருவாக்குவதற்கு 2007 யூன் 28 ஆந் திகதி பொதுத் திறைசேரியால் சபைக்கு ரூபா 37.50 மில்லியன் வழங்கப்பட்டது. அச் செயற்திட்டம் தோல்வியடைந்தமையால் 2011 செப்டெம்பர் 11 ஆந் திகதியளவில் சுழற்சி நிதியத்திலிருந்த ரூபா 17,549,342 மீதி 2007 யூன் 20 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் பொதுத் திறைசேரிக்கு வழங்கப்பட வேண்டுமாயினும், அவ்வாறு செய்யாததுடன் அதில் ரூபா 13,295,637 நிலையான வைப்பிலிடப்பட்டுமிருந்தது.

(ஆ) உயிரியல் விஞ்ஞானக் கையிருப்பின் கீழ் லிவங்கினங்களைப் பெறுமதியிடப்படுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்ட 03/2017 ஆம் இலக்க சபையின் சுற்றறிக்கையானது புரிந்து கொள்ளக் கூடியவாறு தயாரிக்கப்படவில்லை எனப் பின்வரும் விடயங்களின் மூலம் அவதானிக்கப்பட்டது.

(i) உள்ளூர் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட பசுக்கள் பெறுமதியிடப்படும்போது பயன்படுத்தப்பட்ட விதி முறைகளில் உள்ளடங்கிய உயிருடனான நிறைக்கான பெறுமதியைப் பெறும்போது பயன்படுத்தப்பட்ட கணிப்பில் பெருமளவு வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. உயிருடனான உள்ளூர் பசுக்களின் நிறை ஒரு கிலோ கிராம் ரூபா 92 முதல் ரூபா 200 வரையாகவும் இறக்குமதிப் பசுக்கள் ரூபா 110 முதல் ரூபா 910 வரையாகவும் இருந்தன. இக் கணிப்பு தெளிவுற இனங்காணப்படும் விதத்தில் அமைந்ததாக அவதானிக்கப்படாமை.

(ii) கருவுறாத பசுக்களை (Heifers) பெறுமதியிடுகையில் அவற்றை உயிருடன் நிறுத்து அப் பெறுமதிக்கேற்ப பாலின் பெறுமதியை (கமப் பண்ணையின் சராசரி பால் உற்பத்தி X ரூபா 1,000) சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டமை.

(iii) ஏழு கமப் பண்ணைகளில் உள்ள கருவுறாத பசுக்களின் (Heifers) பெறுமதிக் கணிப்பின்போது 1,377 பசுக்கள் சபையின் 03/2017 ஆம் இலக்க சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கமைய பெறுமதியிடப்பட்டிராமை மற்றும் ஏனைய 09 கமப் பண்ணைகளில் பால் வழங்கும் பசுக்களின் நாளாந்த சராசரி பால் உற்பத்தி லீட்டரின் அளவு அடிப்படையில் 1757 பசுக்களுக்கு (Heifers) அவற்றின் உயிருடனான எடையுடன் பாலின் பெறுமதியாக ரூபா 10,051,700 சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தமை.

**4.5 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்**

சபைக்குச் சொந்தமான 7 கமப் பண்ணைகளில் உள்ள 54 ஊழியர் மனைகள் பயன்படுத்தப்படாதிருத்தல் அவதானிக்கப்பட்டது.

**4.6 முறைப்படி சுவீகரிக்கப்படாத காணிகளில் / சொத்துக்களில் செயற்திட்டங்களை ஆரம்பித்தல்**

1974 மற்றும் 1992 ஆம் ஆண்டுகளிலிருந்து பேணப்பட்டவாறிருக்கும் 24 கமப் பண்ணைகளுக்குரிய 10241 ஹெக்டயார் காணியின் உரித்து முறைப்படி சுவீகரிக்கப்படாது அக்கமப் பண்ணைகளில் ரூபா 194,565,192 பெறுமதியான கட்டிடங்களும் ரூபா 701,358,733 பெறுமதியான அமைப்புகளும் சபையால் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

**4.7 பதவியணி நிர்வாகம்**

2007 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய 9/2007(i) டீ இலக்க நிர்வாகச் சுற்றறிக்கையின் (i) மற்றும் (iv) ஆம் பந்திகளுக்கு முரணாக அமைச்சரவையின் அங்கீகாரமின்றி நியமிக்கப்பட்ட 5 மதியுரையாளர்களில் விலங்கின மருத்துவ மதியுரையாளரைத் தவிர ஏனைய 4 மதியுரையாளர்களுக்கும் சேவை நிபந்தனைகள் (Terms of Referene) வழங்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, மதியுரையாளர்களது செயலாற்றல் அறிக்கைகள் மற்றும் அவர்கள் வருகை தருதல் தொடர்பான அறிக்கைகளும் உறுதி செய்யப்படாது முன்னைய ஆண்டில் ரூபா 1,305,665 மற்றும் மீளாய்வாண்டில் ரூபா 2,294,423 எனப் படியாக வழங்கப்பட்டிருந்தது.

**4.8 சந்தைப் பங்களிப்பு**

குடிசன புள்ளி விபரத் திணைக்களம் மற்றும் இலங்கை வங்கி அறிக்கைகளின் பிரகாரம், மீளாய்வாண்டின்போது நாட்டின் ஒட்டுமொத்த பால் உற்பத்தி 384,008,400 லீட்டர் ஆகும். தேங்காய் உற்பத்தி 3,011,000,000 ஆகும். கோழி உற்பத்தி 21,056,020 ஆகும். அதில் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி அதிகார சபையின் உற்பத்திகள் முறையே 17,936,997 லீட்டர் பால், 21,000,000 தேங்காய்கள், 2,762,213 கோழிகள் என்பன மாத்திரமே. அதற்கமைய, சபையின் பங்களிப்பு மிகக் குறைவான மட்டமான பால் 4.67 சதவீதமாகவும், தேங்காய் 0.7 சதவீதமாவும், கோழிகள் 13.12 சதவீதமாகவும் இருந்தன.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்களைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டுமாயினும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 யூன் 16 ஆந் திகதியன்றே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 கூட்டிணைந்த திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 பிரிவின் பிரகாரம் நிதியாண்டு ஆரம்பமாவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், நாளதுவரையாக்கப்பட்ட மீளாய்வாண்டினது கூட்டிணைந்த திட்டம் 2016 ஒக்டோபர் 27 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டு 2017 யூலை 12 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்தில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்படவில்லை.

(i) தற்போது நிறுவனத்தில் உள்ள வளங்கள்

- தலைமை அலுவலக காணி, கட்டிடம் தொடர்பான தகவல்கள்
- உற்பத்தி மற்றும் செயற்பாட்டு வசதிகள்
- மனித வளம் மற்றும் முகாமைத்துவ திறமை
- தொழில்நுட்ப அறிவு
- சந்தைகளும் வழங்குநர்களும்

(ii) நிறுவன அமைப்பினது வியூகம்

(iii) திட்டக் காலப்பகுதியின்போது நிறைவேற்ற வேண்டிய இலக்குகள் மற்றும் நோக்கங்கள் சம்பந்தமாக செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கிய முகாமைத்துவ பொறுப்பு

(iv) தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் கீழ் இயங்கும் டிலைட், பட்டய விற்பனை அங்காடிகள், பாலுக்கான செயற்திட்டங்கள் மற்றும் தலைமை அலுவலக விற்பனை அங்காடிகள் ஆகிய செயற்திட்டங்கள் சம்பந்தமான தகவல்கள்

### 5.3 செயல் நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 5(2) ஆம் பந்தியின் பிரகாரம், கூட்டிணைந்த திட்டத்தின் அடிப்படையில் எதிர்வரும் நிதியாண்டில் செயற்படுத்தவுள்ள வணிகமய செயற்பாடுகளை உள்ளடக்கியவாறு நிறுவனம் ஒட்டு மொத்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டுமாயினும், மீளாய்வாண்டில் தலைமை அலுவலகம், 4 செயற்திட்டங்களின்

செயற்பாடுகளையும் பின்வரும் விடயங்களையும் உள்ளடக்காது செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

(i) வருடாந்த வரவு, செலவுத் திட்டத்தில் உள்ளடங்க வேண்டிய நிதி நிலைமைக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று

(ii) கடனை திருப்பிச் செலுத்துவதற்கான திட்டம்

(iii) நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனத்தின் நிறுவன வியூகம், அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் தற்போதுள்ள பதவியணி விபரம்

(ஆ) தகவல் தொழில்நுட்ப பிரிவால் 2016 ஆம் ஆண்டில் வரவு, செலவு மதிப்பீட்டிற்குள்ளானதும், பொருட் கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடங்கியதுமான ரூபா ஒரு மில்லியனுக்கான வழிகாட்டி ஏற்பாட்டு முறைமையையும் ரூபா 8 மில்லியனுக்கான Enterprises Resource Planning (ERP) முறைமையையும் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டபோதும், அவை கொள்வனவு செய்யப்படவில்லை. மேலும், அவற்றை அமுல்படுத்துவதற்கு தேவையான ஊழியர்களது ஆட்சேர்ப்பு மற்றும் ஊழியர்களது பயிற்சி என்பன 2016 ஆம் ஆண்டினது செயல் நடவடிக்கைத் திட்டத்தில் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(இ) கமப் பண்ணைகளுக்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தபோதும் அவற்றுளடங்கிய செயற்பாடுகளது காலாண்டிற்கான உருப்படி செயல் முன்னேற்ற மற்றும் நிதிசார் முன்னேற்ற எதிர்பார்ப்புகள் தெரிவிக்கப்படவில்லை.

## 5.4 பொருட் கொள்வனவுத் திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினது பொருட் கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடங்கிய சகல கொள்வனவுகளதும் ஆரம்பத் திகதி 2016 சனவரி 01, இறுதித் திகதி 2016 டிசெம்பர் 31 எனச் சுட்டிக் காட்டப்பட்டிருந்தபோதும், அக்கொள்வனவுகளை மேற்கொள்ள வேண்டிய குறிப்பிட்ட கால எல்லை குறிப்பிடப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின்போது 16 கமப் பண்ணைகளது 36 வகைப் பொருட்கள் கொள்வனவு செய்யப்படுவதற்கு அங்கீகாரம் பெறப்பட்ட பொருட் கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடங்கிய ரூபா 23,757,800 பெறுமதிக்கும், வரவு, செலவுத் திட்டப் பெறுமதியாகிய ரூபா 33,343,600 க்குமிடையே ஒன்றுக்கொன்று இணக்கம் காணப்படாத சந்தர்ப்பங்கள் நிலவின.

## 5.5 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொருட் கொள்வனவுத் திட்டத்தில் 22 கமப் பண்ணைகளுக்கு 82 வகைப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கென அவை சேர்க்கப்பட்டிருந்த போதும், தேவையான நிதியேற்பாடு வரவு, செலவுத் திட்டத்தில் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) 2016 – 2020 வரைக்குமெனத் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் மூலம் நிறுவனத்தினது பயிற்சி நிலையத்தினூடாக பால் பண்ணை முகாமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரிகளுக்கு கமப் பண்ணைகளுடன் இணைந்த பயிற்சி வழங்குவதற்கென (போபத்தலாவ, டயகம, மெனிக்பாகம, ரிதியாகம) வசதிகள் வழங்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டபோதும், 2016 ஆம் ஆண்டினது வரவு, செலவுத் திட்டத்திலும் செயல் நடவடிக்கைத் திட்டத்திலும் அதன் பொருட்டு குறிப்பாக வேலைத் திட்டமெதுவும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

(இ) 2015 நவம்பர் 24 ஆந் திகதி நடைபெற்ற 469 ஆம் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் ரொய்டா கமப் பண்ணையில் புதிய பசுக்களை வைத்திருப்பதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்துவதற்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அது வரவு, செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை.

(ஈ) 2016 யூன் 28 ஆந் திகதிய 475 ஆம் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் ஹொரகெலே கமப் பண்ணையில் பன்றிகளுக்கான தரிப்பிடத்தை நிர்மாணிக்க அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தபோதும், அது வரவு, செலவுத் திட்டத்திலும் பொருட் கொள்வனவுத் திட்டத்திலும் உள்ளடக்கப்படவில்லை.

## 5.6 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளிநாட்டு வங்கிக் கடனில் அமுலாகிய வெலாட் பசுக்களது செயற்திட்டத்தின் மூலமாக 2013 ஆம் ஆண்டின்போது செலவிடப்பட்டு மெனிக் பாலம் கமப் பண்ணையின் கீழ் மூலதனச் செலவினமாகக் கணக்கிலிடப்பட்ட தொகை ரூபா 80,604,253 ஆகும். இது 2014 ஆம் ஆண்டில் வருவாய்ச் செலவினமாக திரண்ட வருமானத்தில் பதிவழிக்கப்பட்டிருந்தது. இச்செலவினத்தை வருவாய்ச் செலவினமாகப் பதிவழிக்கக் காரணம் மற்றும் அச் செலவினத்தை உறுதி செய்வதற்கான எதுவித சான்றும் இவ்வறிக்கைத் தினம் வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான கமப் பண்ணைகளில் அமைந்துள்ள 70 மனைகளில் அத்துமீறிக் குடியிருப்போரை அகற்றுவதற்கான நடவடிக்கையை சபை மேற்கொள்ளவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுக் குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை** | **அவதானிப்புகள்** |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) கமப் பண்ணைக் கணக்கைத் தயாரிக்கையில் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் சில கடைப்பிடிக்கப்படாமை |
| | (ii) நாட்குறிப்புகளுக்கான சான்றுறுதிப் பத்திரங்கள் தயாரிக்கப்படாமை |
| (ஆ) கமப் பண்ணையினது உயிரியல் விஞ்ஞானச் சொத்துக்களைப் பெறுமதியிடல் | கையிருப்புப் பெறுமதி சுயாதீனமான ஒருவரால் மேற்கொள்ளப்படாமை |
| (இ) பதவியணி நிர்வாகம் | ஆட்சேர்ப்புக்கு விண்ணப்பங்களைக் கோருதல், நேர்முகப் பரீட்சைக்கு சபை புள்ளிகளை வழங்குதல், பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் அத்தகவல்களைச் சமர்ப்பித்தல் என்பன தெளிவுற அமையவில்லை. |